# அப்பா பிதா

அப்பா பிதா அப்பா பிதா
எனக்கெல்லாம் நீர் தானே
நீர் மாத்ரம் போதும் தேவா

என் பிரியமே என் ஆத்துமா
உம்மை ஆராதிக்குமே
என் ஜீவனே என் நேசரே
உம்மை ஆராதிக்கின்றேன்

விவரிக்க முடியாதது
நீர் காட்டின அன்பு
சொல்லி முடியாதது
நீர் அருளிய ஈவு

அப்பா பிதா என் இன்பமே
உம் பிரசன்னமே என் சுகமே

என் ஆத்ம பொன் நேசரே
உம் சந்நிதி நறுமணமே
தேன் கூட்டின் தெளிதேனிலும்
உம் அன்பு மதுரமாமே